Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    கார்த்திகை 14    (29-11-1992)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 285

## சுருக்கெழுத்தாளர் பரீட்சை பரீட்சார்த்திகள் ஏமாற்றம்

சுருக்கெழுத்தாளர் போட்டிப் பரீட்சைக்கு சென்ற சுமார் எண்பது பரீட்சார்த்திகள் ஏமாற்றம் அடைந்தனர் இவர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்படாமையே இந்த ஏமாற்றத்திற்கு காரணமாகும். நேற்றுக்காலை வேம்படி மகளிர்கல்லூரியில் சுருக்கெழுத்தாளர்களுக்கான போட்டிப் பரீட்சை இடம்பெற்ற போது பரீட்சை மண்டபத்திற்கு பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியல் உத்தியோகப் பூர்வமாக வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளின் அடிப்படையிலேயே அவர்கள் பரீட்சை எழுத அனு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தோல்வியினால் அரசிற்கு பெரும் நெருக்கடி

## அரசியற் தீர்வு குறித்து சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இடைவிடாத தாக்குதலினால் ராணுவத்திற்கு ஏற்பட்டுவரும் தோல்வியும், பாரிய உயிரிழப்பும், பொருளாதார நெருக்கடியும் இணைந்து இனப்பிரச்சினை தொடர்பாக அரசியற் தீர்வு ஒன்று குறித்து சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியுள்ளதாகவும் இதன் காரணமாக பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து அரசவட்டாரங்களில் சிந்திக்கப் படுவதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலமாகப் பேசப்படுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் இராணுவம் பல தளபதிகளை இழந்துள்ளது. இதன் காரணமாக முன்னரைப் போன்று யுத்தத்திற்கென ஆயிரக்கணக்கான கோடி ரூபாக்களை ஒதுக்கி விட்டு அரசாங்கத்தால் சும்மா இருந்துவிட முடியாத நிலை உருவாகியுள்ளது. அதிகார உயர் மட்டத்தில் ஏற்படும் உயிரிழப்புக்கள் அரசாங்கத்தையே பெரும் ஆட்டம் காணச் செய்துள்ளதாக அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

அடுத்து, இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுவதும், பெருமளவில் இராணுவத்தை விட்டு ஓடுவதும், புதியவர்கள் இராணுவத்தில் சேர முன்வராமையும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு குறித்து சிந்திக்க வைத்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், சிறிலங்காவின் பொருளாதாரமும் யுத்தசெலவீட்டு ஒதுக்கீட்டால் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளது, அந்நியமுதலீட்டைக் கவர்ந்திழுக்கும் முயற்சியும் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு வெளிநாடுகள் பல வற்புறுத்தவும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## செட்டிகுளம் பகுதிக்கு தமிழர் செல்லத் தடை

(வவுனியா)

செட்டிகுளம், இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியில் வாழும் அனைத்து மக்களும் பொலிசாரின் அனுமதியைப் பெற்று அதற்கான அத்தாட்சியை வைத்திருக்க வேண்டு என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப் பகுதியில், இந்தியாவிலிருந்து திருப்பி வந்த தமிழ் அகதி மக்களும் குடியேற்றம் செய்யப்பட்ட சிங்கள, முஸ்லிம் மக்களும் தற்போது தங்கியுள்ளனர்.

தவிர, வெளியிடங்களிலிருந்து அப்பகுதிக்கு அரசாங்க ஊழியர்கள் மட்டும் செல்வதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஊழியர்கள் இராணுவத்தின் 'பாஸை' பெற்று அங்கு செல்லவேண்டும்.

அங்குள்ள உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் பணிபுரியும் ஊழியர்கள், மற்றும் அரசாங்க ஊழியர்களைத் தவிர, வேறு தமிழர்கள் அங்கு செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாம். (தி)

## நொச்சிமோட்டை பாலத்தில் புதிய ராணுவ காவலரண்கள்

(வவுனியா)

நொச்சிமோட்டை பாலத்திற்கு அருகில் புதிய காவலரண்களை அமைக்கும் வேலையில் சிறிலங்கா இராணுவம் ஈடுபட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கையில் பல நூற்றுக் கணக்கான படையினர் ஈடுபட்டுள்ளனர். இராணுவ வாகனங்களில் கொண்டுவரப்பட்ட முள்ளுக் கம்பிகள் கொங்கிறீற் கற்கள், சாக்குகள் போன்றவற்றை உபயோகித்து காவல் அரண்கள் அமைக்கும் வேலை துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மின்சாரக் கம்பிகளும் பெருமளவில் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வவுனியா - யாழ். வீதியிலுள்ள இராணுவ வேலியை சிறிது தூரம் முன் நோக்கி அமைப்பதற்காகவே இராணுவம் முயல்கிறது என தெரிய வருகிறது.

வவுனியா நகரைச் சுற்றி சில சிங்களக் கிராமங்கள் உள்ளடங்கியதாக பல மைல் தூரத்திற்கு இந்த இராணுவ வேலி அமையும். யாழ். வீதியிலிருந்து கிழக்கே மடுக்கந்த வரையும் கண்காணிப்பு அரண்கள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [தி]

## வவுனியா நகர பகுதியில் ராணுவம் கடும் சோதனை

(வவுனியா)

வவுனியா அரசாங்க காரியாலயங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் கடைகள் அனைத்திலும் இராணுவம் சோதனை வேட்டையில் ஈடுபட்டுள்ளது. பொலிசாரின் அனுமதிப் பத்திரம் பெறாமல நடமாடுவோர் அனைவரும் கைது செய்யப்படுகின்றனர்.

வவுனியாவில் சமீப நாட்களாக இராணுவத்துடன் பொலிஸாரும் இணைந்து இந்தச் சோதனை வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

மதவழிபாட்டுத் தலங்களுக்குள் நுழையும் இராணுவம் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டுள்ளவர்களைக் கூட சோதனை செய்கிறது. மதகுருமார்களின் இருப்பிடங்களும் சோதிக்கப்படுகின்றன

வவுனியா நகரப் பகுதி விளையாட்டு மைதானங்களில் விளையாட்டில் ஈடுபட்டுள்ளவர்களும் சோதனை செய்யப் படுகின்றனர். தீவிரவாதிகளின் ஊடுருவலை கட்டுப்படுத்துவதில் இராணுவம் தீவிரமாகச் செயல்படுகின்றது என காரணம் சொல்லப்படுகிறது. (தி)

## இனப் பிரச்சினைக்குத் தீர்வு அரசியற்கட்சிகள் அனைத்தும் தீர்வை முன்வைக்க வேண்டும்

- பிரேமதாசா


(வவுனியா)

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய

வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற வவுனியா மாவ

இனப்பிரச்சினைக்கு நீதியான

## வீரச்சாவு



## கொழும்பில் தமிழ் இளைஞர்

- பிரேமதாசா

வடக்கு - கிழக்கு பிரச்சினை க்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை முன்வைக்குமாறு சகல கட்சிகளையும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கேட்டுக் கொண்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கு அப் போதைய அரசுக்குச் சட்ட ரீதியான அதிகாரம் இருக்க வில்லை. ஈ. பி. ஆர். எல். எவ் வின் தலைவரும், முதலமைச் சரும் இலங்கையின் அரசியல் சட்டத்தை மீறிய காரணத் தால் அரசு மாகாணசபை யைக் கலைத்தது.

தியாவயத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற வவுனியா மாவ ட்ட ஐ. தே. கட்சி மாநாட் டில் உரையாற்றும் போது ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேம தாசா இவ்வாறு கூறினார்.

வடக்கிலும் கிழக்கிலும் சமாதானம் நிலவுமானால் அங்கு தேர்தலை நடத்த முடி யும். இந்த முக்கியமான பிரச் சினைக்குத் தீர்வை எட்டுவத ற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழு முயற்சிசெய்து வருகிறது என்றார் அவர்.

அனைவரின்யோசனைகளை யும் கவனத்துக்கு எடுத்து

இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வைக் காண்பதே அரசின் நோக்கம். எல்லாக் கட்சிகளும் ஐக்கியப்பட்டு இந்தப் பிரச் சினைக்கு நீதியான ஓர் தீர்வை ஏற்படுத்தினால் அதன் மூலம் அரசு அரசியல் லாபம் பெற முயற்சிக்காது. தீர்வைக் கொண்டுவருவதற்குப் பாடு பட்ட அத்தனை கட்சிகள் அனைத்துக்கும் மதிப்பு உரிய தாக இருக்கும் என்று ஜனா திபதி குறிப்பிட்டார்.

இலங்கையின் அரசியல் சட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# குண்டு வெடித்தாலே தீர்வு பற்றி பேசுகிறார்கள்

**- வாசுதேவ நாணயக்கார**

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினை க்கு வடக்கு கிழக்கு இணைப் பின் மூலமே உறுதியான தீர்வை காண முடியும் என வாசுதேவநாணயக்காரதெரிவி த்துள்ளார்.

வடக்கு கிழக்கில் நடை பெறும் யுத்தத்தில் அரசியல் வாதிகளும் அரசும் கண்டும் காணாதது போல் இருக்கின் றது. கொழும்பில் குண்டு வெடித்தால் அல்லது இரா ணுவத்திற்கு பாரிய இழப்பு ஏற்பட்டால் மட்டும் அரசியல் தீர்வு என்ற சதுரங்கத்தை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் நாம் வாழ முடியாதநிலை ஏற்படும்

**-அத்தாவுட செனவிரத்தினா**

கொமாண்டர்கள், ஜெனரல் கள், மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் கூட கொல்லப் படும் சூழ்நிலையில் அரசாங்க த்திடமிருந்து சாதாரணமான மக்கள் பாதுகாப்பை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும். என்று பாராளுமன்றத்தில் கேகாலை மாவட்ட ஐக்கிய சோஸலிசக் கூட்டணியின் எம். பி. யான அத்தாவுட செனவிரத்தினா கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில் ஆறாயிரத்திற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டும், இருநூறு பில்லியன்ரூபா செல விடப்பட்டும் போர் ஒரு முடி வுக்கும் வரவில்லை. இது தொடர்பான அரசாங்கத்தின் அணுகுமுறை எமக்கு திருப்தி தரவில்லை. இது நாட்டை ஐக்கியப் படுத்துவதற்கு பதில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தேர்தற்கால வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளது

**—சிறிமாவோ பண்டாரநாயக்கா**

(கொழும்பு)

1988-ம் ஆண்டின் ஜனாதி பதித் தேர்தலின்போது தம் மால் முன்வைக்கப்பட்ட ஜன நாயக மக்கள் கூட்டணியின் அரசியல் வேலைத் திட்டம் தற்போது ஏற்புடையதல்ல என்றும், அதனைத் தமது கட்சி கைவிட்டு விட்டது என் றும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பாது காப்பு அமைச்சிற்கான ஒதுக் கீடு தொடர்பான விவாதத் தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், ஜனநாயக மக்கள் கூட்டணி யின் அரசியல் வேலைத் திட் டம் மக்களால் தோற்கடிக்கப் பட்டு விட்டது என்றும் தெரிவித்தார்.


அத்துடன் போர் இப்போது

[4 ஆம் பக்கம் பார்க்க]



லெப். மதி

25 - 11 - 92 அன்று பகல் 12 30 மணியளவில் மன்னார் பரியாரிக்கண்டல் என்னும் இடத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் லெப்டினன்ட் மதி (பாலசிங்கம் சத்தியசீலன் நவக்கிரி, புத்தூர் அச்சுவேலி) என்னும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந் தார்.



லெப். செங்கண்ணன் [பூவாசன்]

26 - 11 - 92 அன்று சில்லா லைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் லெப்டின ன்ட் செங்கண்ணன் - பூவாசன் (புஸ்பம் இளங்கீரன். நல்லூர் (புங்குடுதீவு-4) என்னும் விடு தலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவர்களுக்கு தமிழீழ விடுத லைப் புலிகள் தமது வீரவண க்கத்தை தெரிவித்துக் கொள் கின்றனர்.

# கைது தொடர்கிறது

(கொழும்பு)

கொழும்பிலும், அதன் சுற் றுப் புறங்களிலிருந்தும் தமிழ் இளைஞர்கள், பெண்கள், வர்த்தகர்கள் உட்பட பலர் தினமும் கைது செய்யப்படுவ தாகச் செய்திகள் தெரிவிக்கின் றன.

வெள்ளவத்தைப் பகுதியில் இருதமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், இவர்களிடமிருந்து வாக்கி டோக்கிக் கருவிகள் கைப்பற் றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

குண்டுத்தாக்குதலில் கொல் லப்பட்ட கடற்படைத்தளபதி கிளான்சி பெர்னான்டோவின் படத்தை வைத்திருந்ததாகக் கூறப்படும் இரு தமிழ் இளை ஞர்கள் கொள்ளுப்பிட்டியில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நயினாதீவைச் சேர் ந்தவர்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பு நகரப்பகுதியில் இருபத்தேழு வயதுடைய சோமசந்திரன் என்பவர்கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர் கொழும்பில் புலிகளின் நிதிநடவடிக்கைக்குப் பொறுப் பாக இருந்தவர் என்றும் பொலிசார் தெரிவித்தனர். இவர் தங்கியிருந்த விடுதிச் சொந்தக்காரரான சிங்களவர் ஒருவர் தேடப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த மூன்று தமிழ் வர்த்த கர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள னர்.

தங்காலைப் பொலிசார் 14 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். இவர்கள் ஒரு குழுவாகக் கதிர்காமத்திற்கு யாத்திரை செய்துகொண்டிரு ந்தபோது கைதுசெய்யப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கைதுசெய்யப் பட்ட ஆயிரக்கணக்கான தமிழ்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிறிலங்கா படையில் இணைய முஸ்லிம் இளைஞர் மறுப்பு

### தனிப்பிரிவு வேண்டுமாம்

(புத்தளம்)

சிறிலங்கா இராணுவத்தில் இணைந்து கொள்ள முஸ்லிம் இளைஞர்கள் தயாராக இல்லை என மன்னார் மாவ ட்டத்திலிருந்து இடம்பெயர் ந்து புத்தளத்தில் தங்கியிருக் கும் முஸ்லிம்கள் தெரிவித்துள் ளனர்

சிறிலங்கா இராணுவத்தில் இணைந்து கொண்டால் தமது மதக்கடமைகள் பாதிக் கப்படும் எனவும் தனி முஸ் லிம் படையொன்றை அமைத் தால் இவ்வாறான பிரச்சினை எழாது எனவும் அவர்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## போதைப் பொருள் கும்பல் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பு பாபர் வீதி பகுதி யில் இருக்கும் ஒரு வர்த்தக ருக்காக போதைப் பொருள் களை பைக்கட்டுகளில் அடை த்துக்கொண்டிருந்த மூன்று தமிழ் இளைஞர்கள் நுகே கொடை பகுதியில் பொலி ஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இதேவேளை வத்தளை பகுதியில் மேலும் ஐவர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டதாகவும் இவர்களிட மிருந்து சில கைக்குண்டுகள் இரு பிஸ்டல்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மன்னார், மட்டக்களப்பு வல் வெட்டித்துறைப் பகுதிகளைச் சேர்ந்த இந்த இளைஞர்கள் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் என்றும் பாலத்துறை பகுதி யில் தலைமையகம் அமைத்து செயற்பட்டு வந்தனர் என்றும் பொலிஸார் மேலும் கூறுகின் றனர்.

## ஊர்காவற்படை கைது

[மாத்தறை]

லக்கல, நாரங்கமுவ பகுதி களில் உள்ள வீடுகளில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவரும் மற்றும் இருவரும் மாத்தறைப் பொலிசாரினால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

**காடழிப்புக்கு பிரியாவிடை கொடுத்து காடுவளர்ப்புக்கு வரவேற்பு கொடுப்போம்**

## வரி விளம்பரம்

### மிருதங்கம்

மிருதங்க திருத்த வேலைகள் நல்ல நாதத்துடன் சுத்தமான முறையில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் மிருதங்க தொழில் நிலையம், 192/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [3691]

### எம். ஜி. ஆர் திருமணசேவை

அரச தொழில் புரியும் பெண்களுக்கு அரச தொழில் புரியும் அல்லது சொந்தத் தொழில் புரியும் மணமகன்கள் தேவை. வே. புண்ணியமூர்த்தி புத்தூர்சந்தி, மீசாலை. (3363)

### நுளம்பு குத்துகிறதா?

பொன்னின் குழல் ஊதி வந்து உங்கள் பொன்னான மேனியில் ஊசி போடுகிறதா? ஒன்று செய்யுங்கள். சாம்பிராணி புகைப்பது போல மில்க்வைற் நீம் தூபத்தைப் புகைத்துப் பாருங்கள். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கும். -மில்க்வைற்- (சி-5482)

### வகுப்புக்கள்

C.C A கலைவர்த்தகக்கல்லூரி வெலிங்டன் சந்திக்கருகாமை மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். 10 ஆம் ஆண்டு O/L மாலைநேர வகுப்புக்கள். ஆரம்பம் : 5-12-1992 விஞ்ஞானம்- திரு செல்வவடிவேல் கணிதம்- திரு. இரா. அருட்செல்வம், திரு நிமலநாதன் ஏனைய பாடங்களும் நடைபெறும். -நிர்வாகி (சி-5473)

### விற்பனைக்கு

அழகிய படத்துடனான கலண்டர்கள் விற்பனையாகின்றன. பல வர்ணக் கலர்களில் விலாசம் பதிப்பித்தும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகள் தங்களின் தேவைக்கேற்றபடி கொள்வனவு செய்து ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள் ஸ்ரீகாந்தா அச்சகம்-- புத்தகசாலை 330, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (3640)

### ஒலிவெற்றி தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்)

புத்தம்புதிய ஒலி வெற்றி தட்டச்சு இயந்திரம் (Oliviti Tybriter (English) விற்பனைக்குண்டு. கொழும்பு விலைக்குப்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5399)

### எதிர்வரும் 2இல் குமாரி புறப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்குத் தேவையான ஒருதொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு "குமாரி" கப்பல் கொழும்பில் இருந்து எதிர்வரும் 2 ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகம் நோக்கிப் புறப்பட உள்ளதாக அறிய முடிகின்றது.

# இனப்பிரச்சினைக்கு சமஷ்டி தீர்வு சிறிமாவோ பின்னடிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறைகளை ஆராய அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னேற்றம் குறித்து முரணான செய்திகள் வந்துகொண்டிருப்பதாக பி.பி.ஸி கூறுகின்றது.

சமஷ்டி ஆட்சி அமைப்பிலான அரசியல் சட்டம்குறித்து யு. என். பி மற்றும் சுதந்திரக் கட்சிகளுக்கிடையே இணக்கம் ஏற்பட்டுள்ளது என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குக்கூடிய தன்னாட்சி வழங்கும் எந்தச் சலுகைகளுக்கும் தாங்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை எனச் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றுத் தெரிவித்தார்.

சமாதானத்தைக் காணும் முயற்சியில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் உள்ள அரசியல்வாதிகள் தனிப்பட்ட முறையில் பேசுவது ஒன்று. பகிரங்கமாகப் பேசுவது வேறு என்பது இப்போது தெளிவாகியிருக்கிறது இவ்வாறு பி. பி. ஸி கூறுகிறது.

சமஷ்டி ஆட்சி அமைப்புக்கான அரசியல் சட்டம் பொது மக்கள் ஒப்புதல் அறியும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டால், தாங்கள் அதற்கு இணங்கத் யார் என்று ஸ்ரீ.ல.சு.கட்சியினர் கூறியதாக கொழும்பில் தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

பதிலுக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இரண்டும் இணைக்கப்பட வேண்டுமென்ற தமிழர்களின் கோரிக்கை கைவிடப்பட வேண்டும் என்று சுதந்திரக்கட்சியும், யு. என். பியும் கேட்டுள்ளன.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992 டிசெம்பர் 20 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

i) சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் II

ii) சுருக்கெழுத்தாளர் (தமிழ்) தரம் II

**சம்பள அளவுத்திட்டம்;**

சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம் / தமிழ்) தரம் II
ரூபா 2085 - 10 × 40, 7 × 50 - 2835 ரூபா மாதமொன்றுக்கு

**தகைமைகள்:**

சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் II

1. ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க.பொ. த.(சாதாரண தர) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி
2. பின்வரும் ஆகக் குறைந்த வேகங்களுடன் ஆங்கிலச் சுருக்கெழுத்தில தேர்ச்சி. சுருக்கெழுத்து நிமிடத்திற்கு 80 சொற்கள். தட்டச்சடித்தல் நிமிடத்திற்கு 35 சொற்கள்

சுருக்கெழுத்தாளர் (தமிழ்) தரம் II

1. தமிழ்மொழி அல்லது தமிழ் இலக்கியம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சாதாரணதர) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி.
2. பின்வரும் ஆகக் குறைந்த வேகங்களுடன் தமிழ்ச் சுருக்கெழுத்தில் தேர்ச்சி. சுருக்கெழுத்து நிமிடத்திற்கு 70 சொற்கள் தட்டச்சடித்தல் நிமிடத்திற்கு 20 சொற்கள்

வயது ;

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

குறிப்பு :

தெரிவு சோதனை மூலமும் நேர்முகப் பரீட்சையின் மூலமும்.
ஆங்கிலச் சுருக்கெழுத்தில் மேலதிக அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/- செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் ரூபா 20/- காசுக்கட்டளை/ தபால் கட்டளையும் 23 × 10 ச மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு ரூ.1/- முத்திரைஒட்டப்பட்ட கடித உறையும் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்கத், திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள்

# அழகியற் பல்கலைக்கழகம் அமைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

அழகியல் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்கும் சட்ட மூன் வரைவை கல்வி உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ், ஹமீட் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளார்.

இதன்பிரகாரம் களனியா பல்கலைக்கழகத்தின் வளாகமாக இயங்கி வரும் அழகியல் கல்லூரி தனிப் பல்கலைக் கழக அந்தஸ்துக்கு உயர்த்தப்படும். மருதனார்மடம் இராமநாதன் அக்கடமி அழகியல் பல்கலைக்கழகத்துடன் இணைவதா? இல்லையா என்பது பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, ஒரு சுதேச மருத்துவபல்கலைக்கழகத்தை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இடம் பெயர்ந்தமாணவருக்கு போருட் உதவி

(வடமராட்சி)

வடமராட்சி போருட் நிறுவனம் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் அகதிகளாக தங்கி கல்வி பயிலும் மாணவர்களின் நலன்கருதி மூன்று பாடசாலைகளுக்கு தளபாடம் கரும்பலகைகளை வழங்கியுள்ளது.

ஆழியவளை பாடசாலைக்கு நாற்பது வாங்கு மேசைகளும் நான்கு கரும்பலகைகளும், ... யாணன் மக்களின் ஆதரவுடன் வல்லைவெளியில் சவுக்கு மர நடுகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. (யோ)

### 'எஸ்போ' 92 தேநீர் புறக்கணிப்பு

(கொழும்பு)

கொழும்பில் இடம் பெறும் எக்ஸ்போ '92 சர்வதேச வர்த்...

# அவசரகால சட்டம் அமுலாவதால் பயனில்லை

குணவர்த்தனா

(கொழும்பு)

பய உணர்வு நாடு முழுவதும் ஆக்கிரமித்துள்ள இன்றைய சூழலில் அவசரகாலச் சட்டம் அமுலில் இருப்பதன் பயன் என்ன என்று திருகோணமலை மாவட்ட சுதந்திரக்கட்சி எம்பியான குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில், கடற்படைத்தளபதி கிளான்சி பெர்னாண்டோ கொலை செய்யப்பட்ட பின்னர் முக்கிய பிரமுகர்கள் உட்பட சாதாரண மக்கள் எவருக்கும் பாதுகாப்பு இல்லை என்பது அப்பட்டமாக நிரூபிக்கப்பட்டுள்ளது மக்களுக்குப் பாதுகாப்பளிக்க அரசாங்கம் தவறியுள்ளது. பெரும்பான்மையினரின் நலன்களைப் பாதுகாக்க அரசு அக்கறைகாட்டவில்லை. திருகோணமலை மாவட்டம் முழுமைக்குமென ஒரேயொரு ஹெலிக்கொப்டர் மட்டுமே உள்ளது அதுவும் வெவ்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்

## 2-ம் ஆண்டு நினைவு



### வீரவேங்கை ரசிக்கா
(யாழினி சத்தியநாதன்)

(மாங்குளம் முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்தார்)

வீர ஜனனம்; 30-09-1971 வீரச் சாவு: 27-11-1990

திதி: 29 - 11 -1992

தமிழினத்தின் விடுதலைக்கு உயிர் கொடுத்தாய்
தாயகத்தை மீட்டிடவே களம் புகுந்தாய்
யாழகத்தின் அரியாலை யூர்தனிலே உதித்திட்ட
யாழினியே நம்மினத்தின் துயர்தீர்க்க எழுந்தாயே
மாங்குளம் தனிலே சாவினை அணைத்தாய்
மங்காத தமிழின் பெருமையை காத்தாய்
ஈராண்டு சென்றாலும் இம்மண்ணில் உந்தன்
இணையில்லா வீரத்தை எழுச்சியாய் கொள்வோம்
மானத்தை காத்திட மண்ணிலே இன்று
மாவீர மணியாகி வாழ்கின்றாய் ரசிக்கா!

மகேந்திரா வீதி, அரியாலை -குடும்பத்தினர்
(3723)

## நினைவு கூருகின்றோம்... 1992-11-29

1985-ம் ஆண்டு இதே தினத்தில் திருவையாறுப் பகுதியில். சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

அசோக் (சீவரட்ணம் மேன்சொலமன் இலங்கை

தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்)

புத்தம்புதிய ஒலி வெற்றி தட்டச்சு இயந்திரம் (Oliviti Tybriter (English) விற்பனைக்குண்டு. கொழும்பு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம் டில்கா வாச் வேக்ஸ், (Dilka watch works) பஸ் நிலையம், சாவகச்சேரி. [சி-5470]

## மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம், றோ. க./கிறீஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna. (சி-5450)

## தேவை

நல்லநிலையிலுள்ளஓர் இரும்புப்பெட்டகம் தேவை கிழமை நாட்களில் 10.00தொடக்கம் 4.00 மணிவரை ரகுராமன் நகைமாளிகை53, கஸ்தூரியார் வீதிஎனும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். (3224)

## வெளிவந்து விட்டது

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் ''நான் கடவுள்'', O L வினாவிடைகள், பாடசாலைப்புத்தகங்கள், கலண்டர்கள், உபகரணங்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள தினேஸ் புத்தகசாலை, 19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (3724)

## மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள் புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5409)

கைகளை வழங்கியுள்ளது.

ஆழியவளைபாடசாலைக்கு நாறபது வாங்கு மேசைகளும் நான்கு கரும்பலகைகளும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வராக் கல்லூரிக்கு இருபத்தைந்து மேசை வாங்குகளும் ஐந்து கரும்பலகைகளும், வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு பதினேழு மேசை வாங்குகளும் ஐந்து கரும்பலகைகளையும் வழங்கியுள்ளது.

இப்பகுதியில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற விதவைகள் அநாதைகளுக்கு கடன் அடிப்படையில் தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

மற்றும் இந்நிறுவனம்இமை

## புறக்கணிப்பு

(கொழும்பு)

கொழும்பில் இடம் பெறும் எக்ஸ்போ '92 சர்வதேச வர்த்தக கண்காட்சியில் அமைக்கப்பட்டிருக்கும் உணவகங்களில் தேநீர் விற்பனை தவிர்க்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்காட்சியைப் பார்வையிட வந்த வெளிநாட்டவர் பலர் உணவகங்களில் இலங்கைத் தேநீர் பெறமுடியாமல் ஏமாற்றமடைந்ததாகத் தெரிவிக்கடபடுகிறது. தேயிலை உற்பத்தி செய்யும் நாட்டில் தேநீருக்கு வழியில்லை என்று பல வெளிநாட்டவர் ஆச்சரியம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

பன்ராவும், கோக்கும் மாத்திரமே உணவகங்களில் விற்கப்பட்டன.

க்கெழுத்தில தேர்ச்சி. சுருக்கெழுத்து நிமிடத்திற்கு 80 சொற்கள். தட்டச்சடித்தல் நிமிடத்திற்கு 35 சொற்கள்

வயது:

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

குறிப்பு:

அ) தெரிவு சோதனை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

ஆ) தமிழ் சுருக்கெழுத்தில் மேலதிக அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும.

கத், திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்தேதியின்பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விபரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம.
1992 - 11 - 20

(சி-5496)

## 7-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்:
15
—
09
—
71



வீரச்சாவு:
23
—
11
—
92

### வீரவேங்கை நிதி

[தருமலிங்கம் உதயராணி]

பலாலி இராணுவமுகாம் கிழக்கெல்லையில் 23-11-92 அன்று இராணுவ காவலரண்களை தகர்த்தெறிந்து வெற்றிகொண்ட தாக்குதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை நிதிக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
[சி-5505]


தாய் பரமேஸ்வரி,
தம்பி போராளி ரஞ்சித்,
சகோதர, சகோதரிகள்,
உற்றார், உறவினர்.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப் பிறப்பு:
2-3-1969

★ ★

வீரச் சாவு:
29-11-1987



### வீரவேங்கை சங்கரி

(தேவதாஸ் கிங்ஸ்லி புவனேந்திரன்)

எமது நெஞ்சை விட்டு அகலா அன்பு புவனாவே......
உனது புன்னகைதான் எம் கண்ணில் தெரிகிறது
புவனா! ஐந்தாண்டு சென்றாலும் உனது
இன் முகததை உன் நண்பர்களில் காண்கின்றோம்
கண்மணியே எங்கு சென்றாய்?

இவரின் பிரிவால் துயருறும்,
அம்மா, பெரியம்மா, சகோதரர்கள்,
மச்சான்மார், மச்சாள்மார், மருமகள்,
பெறாமக்கள், நண்பர்கள்.

(சி-5497)

1985-ம் ஆண்டு இதே தினத்தில் திருவையாறுப் பகுதியில். சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

அசோக் (சிவரட்ணம் மேல்சொலமன் இலங்கைராசன்- கெருடாவில், சாவகச்சேரி-யாழ்)

1987-ம் ஆண்டு, தமிழகம்-வேதாரணியப்பகுதியில், இந்திய சுங்க இலாகாவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

கப்டன் றோகான் [தங்கவடிவேல் மணிவண்ணன்- சொர்தியால் ஒழுங்கை, காட்டுவளவு, வல்வெட்டித்துறை-யாழ்]

யாழ்-டேவிட் வீதியில், இந்தியப்படையுடனான நேரடிச்சமரில் காயமுற்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

சங்கரி [தேவதாஸ் புவனேந்திரன்-புவனேந்திரன்வீதி, அத்தியடி-யாழ்]

இதே சமரில் வீரச்சாவெய்திய-

வசி [பி. சுதாகரன்- 09/02, 4-ம் குறுக்குத்தெரு- யாழ்ப்பாணம்]

சண்டிலிப்பாய்ப்பகுதியில், இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய-

குலம் [மார்க்கண்டு வித்தியானந்தம்- வீரமாணிக்க தேவன்துறை, மயிலிட்டி-யாழ்]

1988-ம் ஆண்டு இணுவில் மருத்துவமனைக்கு முன்பாக தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான-
இளம் பெண்.

1990-ம் ஆண்டு பளையில், சிறிலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சு விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொது மகன்

1991-ம் ஆண்டு, மட்டு-முதிரையடி யேற்றம் முகாமிலிருந்து கால் நடையாக ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினரைக் கொடுவாமடுவில் வழிமறித்துத் தாக்குதல் நடத்தியதில் வீரச்சாவெய்திய-

லெப் மாதவன்/முருகமூர்த்தி [யோகராசா யுகேந்திரன்-வந்தாறுமூலை-மட்டக்களப்பு]

2-ம் லெப்.காங்கேசயன்-றோயல் [யோசப் எட்வேட் ஜோய்-வந்தாறு மூலை-மட்டக்களப்பு]

துசன் [ச. பஞ்சாயுதம்-சித்தாண்டி, மட்டக்களப்பு]

தான்தோன்றிராஜன் [ஜீ. அற்புதராசா-கல்லடி- மட்டக்களப்பு]

மன்னார் தொண்டச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

லெப்.புவிராஜ் [அருணாசலம் தர்மரட்ணம்-மாங்கேணி, வாழைச்சேனை-

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/5500]

சிந்தனைக்கு

காற்றாடிகள் உயரப் பறப்பது காற்றடிக்கும் திசையை எதிர்த்துத்தான்; காற்றோடு ஒட்டியல்ல
- வின்ஸ்ட்டன் சர்ச்சில்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 29- 11- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# சிங்களக் கட்சிகள் விடுபடவில்லை

“சமாதானம் காணும் முயற்சியில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் உள்ள அரசியல்வாதிகள் தனிப்பட்ட முறையில் பேசுவதொன்று. பகிரங்கமாகப் பேசுவது வேறு என்பது இப்போது தெளிவாகியிருக்கின்றது’’ இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு தன்னாட்சி வழங்கும் சமஷ்டி அமைப்பு முறைக்கு தாம் இணக்கம் தெரிவிக்கவில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி தெரிவித்துள்ளமை குறித்து பி.பி.ஸி. விமர்சனம் செய்தது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்படும் எந்த முயற்சியும் வெற்றியளிக்கப் போவதில்லை என்பது ஒருபுறம் இருக்க, வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியாகவேனும் சமஷ்டி அமைப்பு முறையில் அமைந்த ஆட்சிமுறை ஒன்று உருவாக்குவதை சிங்கள அரசியல்வாதிகள் ஏற்றுக் கொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் சிலர் இதை ஏற்றுக்கொண்டாலும் பலர் இதை எதிர்ப்பார்கள் என்பது எதிர்பார்த்ததொன்று. ஆனால் இது ஒரு பெரிய எதிர்வு கூறல் அல்ல. ஏனெனில் சிங்களப் பேரினவாதத்தின் வரலாறு புகட்டும் பாடமே இதுதான்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தனித் தனி சமஷ்டி ஆட்சியமைப்பினை உருவாக்கும் திட்டம் குறித்து கடந்த சில வாரங்களாகக் கொழும்பில் பேசப்பட்டு வந்தது. அரசாங்கக் கட்சி மட்டத்திலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மட்டத்திலும் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்ட இத் திட்டம் இருபகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவும் தெரியவந்தது. பின்னர், பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சுதந்திரக்கட்சி சமஷ்டி அமைப்பு முறை தொடர்பாக சம்மதம் தெரிவித்ததாகவும், அதைத்தொடர்ந்து அமைச்சர் ஹமீத் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து ஆதரவு தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இச்செய்தி வெளிவந்த சிலமணித்தியாலங்களுக்குள்ளேயே எதிர்க்கட்சித் தலைவி

# இராணுவத்திலிருந்து தப்பி ஓடுவோர் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும்

- காமினி பொன்சேகா

(கொழும்பு)

அரசாங்கம் எல்லாத் தமாஷ்களையும், கார்னிவல்களையும் முற்றாக நிறுத்திவிட்டு போரில் ஈடுபட்டுள்ள ஆயுதப்படையினரின் நலன்களைக் கவனிக்க முன்வர வேண்டும் என்று துணைச் சபாநாயகர் காமினி பொன்சேகா கேட்டுக் கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் அவர் மேலும் பேசுகையில் கார்னிவல், மற்றும் தமாஷாக்களில் பொழுது போக்குவதற்கு உகந்த நேரம் இதுவல்ல என்றும், எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அண்மையில் வழங்கப்பட்ட முப்பது வீத சம்பள உயர்வைப் படையினரின் நலனுக்காக ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் எம். பிகள் சாதாரண கார்களைப்பாவித்துக்கொண்டு தமது பஜிரோ வாகனங்களை படையினருக்கு கொடுப்பது நல்லது என்றும் ஆலோசனை கூறினார்.

மேலும் கூறுகையில் பிற நாடுகளில் இராணுவத்திலிருந்து தப்பி ஓடுபவர்கள் இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அதேபோல அத்தகைய சட்டங்கள் இங்கும் நடைமுறைக்கு கொண்டு வரப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஆடை ஏற்றுமதியில்

# பல இலட்சம் ரூபா மோசடி பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து அமெரிக்காவுக்கு ஆடைகள் ஏற்றுமதி செய்வதில் பல இலட்சம் ரூபா மோசடி ஒன்றைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கண்டு பிடித்துள்ளது. இந்த மோசடி தொடர்பாக கறுவாக்காட்டைச் சேர்ந்த பெண் ஒருவரையும் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

மோசடியில் பெண்ணுக்கு உடந்தையாக இருந்ததாகக் கருதப்படும் புடைவைத்திணைக்களத்தைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகள் உள்ளிட்ட 24 உத்தியோகத்தர்களைப்பொலிஸார் தீவிரவிசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இந்தப் பெண் புடைவைத் தொழில் அமைச்சு அதிகாரிகளின் உதவியுடன் போலியான ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்களையும், வேறு தஸ்தாவேஜுகளையும் தயாரித்து பல வர்த்தகர்களுக்கு வழங்கிப் பெரும் தொகையான பணத்தைச் சுருட்டியிருப்பதாகப் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது ஒரு அனுமதிப்பத்திரத்திற்கு அனுப்பப்படும் ஆடைகளுக்கு இவர் 2,00,000ரூபாமுதல் 3.00,000 ரூபாவரை வசூலித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சந்தேக நபரான இந்தப் பெண் கொழும்பு கோட்டை நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டு டிசம்பர் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# புலிகளின் தொடர்புநிலையம் கொழும்பில் கண்டுபிடிப்பாம்

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பகுதியினர் கொழும்பில் இயங்கி வந்த விடுதலைப் புலிகளின் முக்கியமான தொடர்பு நிலையம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

கொழும்பில் இயங்கி வந்ததாகக் கூறப்படும் இந்தச் சர்வதேச தொடர்பு நிலையம் புலிகளின் நடவடிக்கைகளுக்கு முக்கிய கேந்திரமாக இயங்கி வந்துள்ளது என்று அதேதரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

லண்டன், பாரிஸ் போன்ற இடங்களிலுள்ள புலிகள் செயலகங்களுடனும், யாழ்ப்பாணத்துடனும் தொடர்பு கொள்வதற்கு இந்த நிலையம் பயன்பட்டு வந்ததாகவும் பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது.

# கொழும்பில் 50 வர்த்தகர் விரைவில் கைதாகலாம்

## புலிகளுக்கு உதவினராம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு கொழும்பில் உதவி புரிபவர்கள் எனக் கூறப்படும் ஐம்பது தமிழ் வர்த்தகர்கள் பற்றிய விபரங்களை பொலிசார் சேகரித்துள்ளனர் என்றும், கொழும்பில் வெள்ளவத்தை, புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி பகுதியில் வசிப்பவர்கள் என்றும் இவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிசார் கூறியுள்ளனர்.

# கட்சியிலிருந்து நீக்கம்

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி எனப்படும் ஈ என். டி. எல் எவ்வை பிரதிநிதித்துவப்படுத்த பாராளுமன்ற உறுப்பினர் கே சிறிநிவாசனுக்கு உரிமையில்லை என்று அக்கட்சி வட்டாரங்கள் கொழும்பில் கூறியுள்ளன.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் எனப்படும் மு. கனகராஜன் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் சிறிநிவாசன் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகவும் கூறியுள்ளார்.

# கும்பாபிஷேகம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு மணிப்புரி அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11-00மணிக்குச் சிறப்பாக நடைபெறும்.

விசேட சங்காபிஷேகமும் கிரியைகளும் பூசை வழிபாடுகளும் இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை காலை7-00மணிக்கு எண்ணை சாத்துதலும் பின் நண்பகல் சங்காபிஷேகம் முடிவும் மாலை முருகப் பெருமான் வீதி வலம் வருதலும் இடம் பெறும் (24)

கொழும்பு பல்கலைக்கழக

# துறைத்தலைவர்கள் மற்றும் விஞ். பீடாதிபதி பதவிதுறப்பு

(கொழும்பு)

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் துறைத் தலைவர்கள் ஏழு பேரும், விஞ்ஞான பீடப் பீடாதிபதியும் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர். கொழும்புப் பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வதால் தமது கடமைகளைத் தங்குதடையின்றிச் செய்ய முடியாதிருப்பதாக இவர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

சிறப்புப் பட்டங்கள் வழங்குவது தொடர்பான பிரமாணங்களில் மாற்றம் செய்ய விஞ்ஞான பீடம் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்தே மாணவர்கள்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

துறைத் தலைவர்களும், விஞ்ஞான பீடப் பீடாதிபதியும் பதவிவிலகியமை பொறுப்பற்ற செயலாகும் என்று கணிதத்துறைத் தலைவர் பேராசிரியர் நளின் டி சில்வா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி பிரச்சினைக்குத் தான் சுமுகமான தீர்வுகாண இருப்பதாக கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஜி. எல். பீரிசின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. இது தொடர்பாகத் துணைவேந்தர் பல்கலைக்கழக ஆசிரியர்கள், பீடாதிபதிகள் மற்றும்துறைத் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

# காலி காட்டுப் பகுதியில் வெடிப்பொருள்கள் மீட்பு

(காலி)

காலியில் அபகல காட்டுப் பகுதியில் இனந்தெரியாத குழு ஒன்றினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிப்பொருள்கள் இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் மீட்கப்பட்டுள்ளதாக சிறிலங்காபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அப் பகுதியில் இனந்தெரியாதோரின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளதாக கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே அப் பகுதிக்கு விரைந்த பாதுகாப்புப் படையினர் ஐம்பதிற்கும் மேற்பட்ட குண்டுகளையும் ரவைத் தொகுதிகளையும் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

# 1,25,000 கிலோ குரக்கன் யாழ்.செயலகம் கொள்வனவு

[யாழ்ப்பாணம்]

குரக்கன் உற்பத்தி யாழ். குடாநாட்டில் விவசாயிகள் மத்தியில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம்முறை யாழ். குடாநாட்டில் உள்ள விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரம் கிலோ கிராம் நிறையுடைய குரக்கனை விவசாயிகளிடம் இருந்து யாழ் செயலகம் கொள்வனவு செய்துள்ளது. இதையிட்டு குரக்கன் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் மத்தியில் பெரியதொரு உற்சாகம் எழுந்துள்ளது. இவர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் ஒரு கிலோ குரக்கனுக்கு தலா 24 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட குரக்கனை மாவாக்கி பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவு முத்திரைகளுக்கு யாழ். செயலகம் விநியோகித்து வருகின்றது.

மேலும் கௌபி, பயறு போன்ற உணவுப் பொருள்களையும் உச்ச விலை கொடுத்து விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யவும் அவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும் யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. [பா]

# ஒரு ‘புளொட்’ பலி

மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை என்னும் இடத்தில் வைத்து புளொட் குழு மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் அக்குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என கொழும்பில் இருந்து வெளியாகும் தினசரி ஒன்று தெரிவிக்கின்றது.

இத்தாக்குதலில் கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் என்கின்ற புளொட்குழு உறுப்பினரே கொல்லப்பட்டவராவார்.

ஆனால், இச்செய்தி வெளிவந்த சிலமணித்தியாலங்களுக்குள்ளேயே எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா இதனை மறுத்துள்ளார். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இவ் மறுப்பிற்கு ஐக்கிய தேசிய கட்சிக்கு முன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சமஷ்டித் தீர்வை ஏற்றுக்கொண்டது என்ற பிரசாரத்திற்கு வாய்ப்பளித்து விடும் இதனால் சிங்கள வாக்காளரிடம் சுதந்திரக்கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சி கண்டு விடும் என்பதே காரணமாகும்.

இதேவேளை அரசாங்க கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் கூட இதற்கு எதிர்ப்பு எழாமல் இருந்திருக்காது. தற்பொழுது சுதந்திரக் கட்சி மறுப்புத் தெரிவித்துள்ளமையால் இதன் பங்கு அற்றுப்போயுள்ளது என்பதே உண்மை. சிலவேளை, சுதந்திரக்கட்சி எதிர்பாராத விதமாக இதனை ஏற்றுக்கொண்டிருக்குமானால், ஐ.தே. கட்சியில் உள்ள பௌத்த பேரினவாதிகள் இதை நிராகரித்திருப்பர். அரசாங்கத் தரப்பில் அமைச்சர் ஹமீத் ஆதரித்துப் பேசியதை அவரது சொந்தக் கருத்து, அரசாங்கத்தின் கருத்து அல்ல என்று பிரேமதாசா கூடக் கூறியிருக்கலாம்.

இந்நிலையினை உலகநாடுகள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைத் தீர்விற்கு இவ் 'ஜனநாயக ரீதியான கட்சிகள்' எவ்வளவு தடையாகவுள்ளன என்பதை அவை கவனத்திற் கொள்ள வேண்டும்.

இதேவேளை தலைவர் பிரபாகரன் மாவீரர் தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதை தமிழ் மக்களுக்கு நினைவு படுத்துதல் பொருத்தப்பாடானது. ''ஆயுத பலத்தால் தமிழினத்தை அடக்கி ஆள வேண்டும் என்ற சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் ஆதிக்க மனோ நிலையில் சிறிதளவேனும் மாற்றம் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. இனத்துவேச அரசியற் சேற்றில் சிங்கள தேசம் மூழ்கிக் கிடக்கும் வரை தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு நீதியான நியாயமான அரசியல் தீர்வை நாம் சிங்கள ஆளும் வர்க்கத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது. இந்தக் கசப்பான உண்மையை எமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்'' மேலும் ''போராடித்தான் நாம் எமது சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக் கொள்ளும் ஒரு வியாபாரப்பண்டமல்ல. அது இரத்தம் சிந்தி வென்று கொள்ளப்படும் ஒருபுனிதமான உரிமை" என்பதே அது.

செக்கோஸ்லாவாக்கியாவில்

## 28 இலங்கைத் தமிழர்கள் மயங்கிய நிலையில் கைது

[பாரிஸ்]

ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் சுமார் ஐயாயிரம் இலங்கைத் தமிழர்கள் அவதியுறுவதாகவும், செக்கோஸ்லாவாக்கியாவில் இருபத்தெட்டு தமிழர்கள் மயங்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

ரஷ்யாவிலிருந்து பெற்றோல் பவுசர்களில் புகுந்து ஒளித்துக் கொண்டு செக்கோஸ்லாவாக்கியா செல்ல முயன்ற இருபத்தெட்டு பேருமே மயக்கமுற்ற நிலையில் செக்கோஸ்லாவாக்கிய எல்லைப் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருபத்தெட்டு பேரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுத் தற்போது வைத்திய சாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ள அதே சமயம் பவுசரின் சாரதியும், இவர்களைக் கூட்டி வருவதற்கு துணைபுரிந்தவர் எனக் கூறப்படும் தமிழர் ஒருவரும் பொலிசாரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டோர்

## திருப்பி அனுப்புவதை நோர்வே இடைநிறுத்தம்

நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரி அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டோரை திருப்பி அனுப்புதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

தமிழர் நோர்வேஜிய இணைவு கூடத்தின் தலைவர் ரி இராசதுரை உட்பட பிரதிநிதிகள் குழு ஒன்று நோர்வே நாட்டு அமைப்புக்களை சந்தித்து புகலிடம் நிராகரிக்கப்பட்ட அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்ததன் பலனாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இணைவு கூடம் நோர்வேயிலிருந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## புளூட்டோனியம் இறக்கப்படமாட்டாது

[டோக்கியோ]

பிரான்சிலிருந்து கப்பல் மூலம் வந்து கொண்டிருக்கும் புளூட்டோனியத்தை ஏற்கனவே திட்டமிட்டபடி டோக்கியோவில் இறக்குவதில்லை என்று ஜப்பான் அதிகாரிகள் கூறியுள்ளனர். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு இயக்கத்தினர் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்துவரும் காரணத்தினாலேயே இத்திட்டம் கைவிடப்பட்டதாக டோக்கியோவில் அதிகாரிகள் மேலும் கூறினர்.

தற்போது ஆபிரிக்கக் கரைக்கு அப்பால் பயணம் செய்து கொண்டிருக்கும் இக் கப்பல் டோக்கியோவிற்கு அப்பாலுள்ள சிறிய நகரமொன்றிற்கு செல்லும்படி தற்போது கட்டளையிடப்பட்டுள்ளது.

# செக்-ஸ்லோவாக்தலைவர்கள்பேச்சு சொத்துப் பிரிவில் இணக்கம் இல்லை

(பிராட்டிஸ்லாவா)

முன்னாள் செக்கோஸ்லாவாக்கியா அரசுக்கு சொந்தமான உடைமைகளைப் பகிர்ந்து கொள்வதில் இணக்கம் காண செக்மற்றும்ஸ்லோவாக்கிய தலைவர்கள் தவறிவிட்டனர்.

எழுபத்து நான்கு ஆண்டுகளாக நீடித்த செக்கோஸ்லோவாக்கிய கூட்டணி அரசு கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் பிரிந்து போனமை தெரிந்ததே.

ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்த பேச்சுவார்த்தையில் செக் மற்றும் ஸ்லோவாக் தலைவர்கள் இணக்கம் காணத் தவறியதையடுத்து கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. எனினும் இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்கான முயற்சி தொடர்வதாகவும் மாத இறுதிக்குள் தீர்வு காணப்பட்டு விடுமென்றும் தெரிய வருகின்றது.

அண்மையில் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தைகள் மூன்றாவது சுற்று பேச்சுக்கள் என்றும், எதிர்கால செக் மற்றும் ஸ்லோவாக் உறவுகளைத் தீர்மானிப்பதில் இது முக்கிய பங்கு வகிக்கின்றது என்றும் ராய்ட்டர் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## இந்திய ராஜ்சபா அங்கீகாரம்

சார்க் பிராந்திய நாடுகளில் வன்முறையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சார்க் கோட்பாட்டிற்கு நேற்றுமுன்தினம் இந்திய ராஜீய சபா ஒப்புதல் அளித்துள்ளது.

1992 ஆகஸ்ட் 22-ம் திகதி முதல் சார்க் பிராந்திய நாடுகளில் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது என்ற கோட்பாட்டிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு இதன் மூலம் வழியேற்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

## 20,000 ஐ. நா. துருப்புக்கள் சோமாலியா செல்லும்

(வாஷிங்டன்)

உதவிப் பொருள்களைப் பாதுகாப்பதற்கென இருபதாயிரம் ஐ நா. துருப்புக்களை சோமாலியாவிற்கு அனுப்புவதென அமெரிக்கா முடிவுசெய்துள்ளது.

தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ்ஷினால் அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து இம் முடிவு ஐ.நா. தலைமைச்செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் காலிக்கு அறிவிக்கப்பட்டது.

சோமாலியாவில் பட்டினிச் சாவுகள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு அந்நாட்டுத் தலைவர்களின் அனுமதியின்றியே ஐ. நா. படைகளை அனுப்புவதுபற்றி பாதுகாப்புச்சபை தற்போது ஆராய்ந்து வருகிறது.

## பிச்சை எடுப்போர் 15 இலட்சம்

[டில்லி]

இந்தியாவில் பிச்சை எடுத்துப் பிழைப்பவர்கள் பதினைந்து லட்சம் பேர் இருக்கிறார்கள். இத்தகவல் இந்தியப் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்டது.

அயோத்திப் பிரச்சினை

## பிரச்சினைக்குரியவர்களிடம் பிரதமர் பேச வேண்டும்

-கல்யாண்சிங்

(டில்லி)

அயோத்தியா விவகாரத்தில் சுமுகமான தீர்வொன்றைக் காண்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பிரதமர் தொடர்ந்து பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று உத்தரப் பிரதேச முதல்வர் கல்யாண் சிங் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் படைப் பலத்தைப் பயன்படுத்தினால் பதற்றத்தை தணிக்கலாமேயன்றி பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது எனவும் வலியுறுத்தினார்.

மாநில அரசின் ஒப்புதலின்றி அயோத்தியாவுக்கு மத்திய படைகள் அனுப்பப்படுவதை கண்டித்து பிரதமருக்கு கல்யாண்சிங் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

ஈழநாதம்

# வவுனியா தேக்கங்காட்டில் ராணுவத்தினரின் குடியிருப்பு

## விடுதிகள் அமைக்க அரசாங்கம் திட்டம்

[வவுனியா[

வவுனியா தேக்கங்காடு தமிழர்களின் காணிகளில் சிங்களக் குடும்பங்களை குடியேற்றுவது தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்து அப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் குடும்பங்களை தங்க வைப்பதற்கான விடுதிகள் அமைப்பதற்கு அரசாங்க மேலிடம் திட்டமிட்டுள்ளது.

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பித்ததை அடுத்து மேற்படி பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்துசென்றன

இந்த நிலையில் இக் காணிகளிலும் அங்குள்ள தமிழர்களின் வீடுகளிலும் சிங்கள குடும்பங்களை குடியேற்றும் வேலைகள் ஆரம்பமாயின.

வவுனியா செயலகத்தில் பணிபுரியும்சில தமிழ் அதிகாரிகளினதும் இடம்பெயர்ந்த மக்களினதும் புகாரை அடுத்து இந் நடவடிக்கை ஸ்தம்பிதமடைந்தது.

தற்போது இந்த நிலப்பரப்பில் இராணுவத்தினரின் குடும்பங்கள் தங்குவதற்கு விடுதி அமைக்கப்பட இருப்பதாக கூறப்பட்டது.

வடபகுதியில் போரில் ஈடுபட்டுள்ள படையினரின் குடும்பங்கள் இங்கு தங்க வைக்கப்பட உள்ளனவாம்.

தேக்கங்காடு பகுதியிலிருந்து இராணுவ அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து ஓடிவந்த தமிழர்கள் வடபகுதியில் வேறிடங்களிலும் இந்தியாவில் அகதியாகவும் தங்கியுள்ளனர்.

சமீபத்தில் தமிழகத்திலிருந்து திரும்பி வந்த மக்களில் இப்பகுதியைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானோர் வவுனியாவில் உள்ள அகதிமுகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். [தி]


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

S. L. A. S. போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள்

(1) கிரகித்தல்

(2) பொதுஉளச்சார்பு

(3) பொது அறிவு

ஆசிரியர்: திரு. அ. குமாரவேல்

(20 மணித்தியால வகுப்புக்கள் அச்சடித்த பாட குறிப்புகள் வழங்கப்படும்)

ஆரம்பம்: 2-12-92 (3 மணி)

(சி-5501)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

## கல்வி ஆண்டு - 1993

O/L மாலை நேர வகுப்புக்கள் (3.00 - 6.00)

சனி, ஞாயிறு வகுப்புக்கள்


## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்கிறார் திருமதி யோகேஸ்வரி மாணிக்கவாசகர் பரிசில் வழங்குவார்.

## உதைபந்தாட்டம்

கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக் கழகத்தினர் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பி.ப. 2.15 மணியளவில் நடைபெறும்.

இப்போட்டியில் மூன்றாம் இடத்திற்கு யங்றோயல் எதிர் திருமலை நட்சத்திரங்கள் இறுதியாட்டத்திற்கு யங்கென்றிசியன்''ஏ''எதிர் ஸ்ரீ முருகன் ''ஏ''என்பன விளையாடவுள்ளன.

# வாகரைப் பகுதி மக்கள் உணவு பெறுவதில் சிரமம்

சுமார் நாலாயிரம் குடும்பங்களைக் கொண்ட வாகரைப் பகுதியில் 900 குடும்பங்களுக்கு மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுகிறது. இதனால் இப்பகுதிமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இப்பகுதியில் கடைகளோ, கூட்டுறவுச் சங்கக் கடைகளோ இயங்குவதில்லை. இதனால் 25 மைல் தூரத்திலுள்ள வாழைச்சேனைக்குச் சென்றே பொருள்களைப்பெறவேண்டிய நிலைஏற்பட்டுள்ளது இவ்வாறு வாழைச்சேனைக்கு செல்வதற்கும் வாகன வசதிகள் இல்லை இதனால் இந்த 25 மைல் தூரத்திற்கும் சென்று திரும்ப இரண்டு நாட்கள் எடுக்கின்றன.

இவ்வாறு பெரும்சிரமத்தின் மத்தியிலும் பொருள்களை கொள்வனவு செய்யும்போதும் நபர் ஒருவருக்கு 3 கொத்து அரிசி 1/2 கிலோ சீனி மட்டுமே எடுத்துச் செல்ல இராணுவம் அனுமதிக்கிறது.

வாரத்திற்கு ஒரு நாள் மட்டுமே செஞ்சிலுவைச்சங்கமும் எம் எஸ்.எவ். நிறுவனமும் வைத்திய சேவையை வழங்கி வருகிறன. அவசர சிகிச்சைகள் எதுவும் இப்பகுதி மக்களுக்கு வழங்கப்படுவதில்லை.

இவ்வாறு அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கடலுக்கு அடியேயான 'கேபிள்' தொலைத் தொடர்பு

(கொழும்பு)

கடலுக்கு அடியிலானகேபிள் தொலைத்தொடர்பு திட்டத்திற்கென நாற்பது நாடுகளுடன் சிறிலங்காவும் முதலீடு செய்யவுள்ளது.

இந்த புதிய தொலைத் தொடர்பு முறை இந்து சமுத்திரம், மத்திய கிழக்கு, என்பவற்றினூடாக தென் கிழக்காசியாவையும், மேற்கு ஐரோப்பாவையும் இணைக்கவுள்ளது.

இந்து சமுத்திரத்திற்கு அடியில் அமைக்கப்படும் முதலாவது கேபிள் தொலைத் தொடர்பு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. 17500 கிலோ மீற்றர் நீளமுடைய தொலைத்தொடர்பு திட்டம் 40நாடுகளால் மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய தொலைத் தொடர்பு திட்டமாகும். 1993 ஜூனில் இந்த தொலைத் தொடர்பு கேபிள் முறை இயக்கத் தொடங்கியதும் 502சர்வதேச இலக்க தொலைத் தொடர்பு முறையில் சிறிலங்காவும் சேர்ந்து கொள்ள இருக்கின்றது.

இடம்பெயர்ந்த ஆசிரியர்

## 161 பேருக்கு சான்றிதழ்

(வடமராட்சி)

வடமாகாண பரியோவான் முதலுதவிச் சங்கத்தினரால் வடமராட்சி கிழக்கு பகுதியில் 161 பேருக்கு கடந்த வாரம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## ஜோய் வீடமைப்பு திட்டத்தில் நினைவஞ்சலிக் கூட்டம்

நாகர் கோவில் லெப். கேணல் - ஜோய்வீடமைப்புத் திட்டத்தில் நாளை மாலை 5.30 மணியளவில் முன்னாள் மூதூர் பிராந்தியத் தளபதி மேஜர் - கணேஸ் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலியும், அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தளபதி லெப். கேணல் - ஜோய் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும், திருக்கோணமலை மாவட்டத்தில் கார்த்திகை மாதம் வீரச்சாவடைந்த 33 மாவீரர்கள் உட்பட இப்மாத அனைத்து மாவீரர்களையும் நினைவு கூரும் முகமாக நினைவஞ்சலிக் கூட்டம் நாகர் கோவில் லெப் கேணல் ஜோய் வீடமைப்புத் திட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த மக்களால் நடாத்தப்படவுள்ளது.

இவ் நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்றுவார்கள் இதன் பின் பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## கல்விவளர்ச்சி கழக வகுப்புகள்

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். கல்வி கோட்டப் பிரிவினரால் நடாத்தப்பட்டு வரும் கல்விவளர்ச்சிக் கழக வகுப்புக்கள் அனைத்தும் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 00 மணிக்கு ஆரம்பமாகும் என யாழ். கோட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## இன்று "வளையாபதி" மேடையேறுகிறது

(குருநகர்)

காப்பிய நாடக வரிசையில் ''சிந்தா மணியைத் தொடர்ந்து யாழ் - திருமறைக் கலா மன்றம் தயாரித்து மேடையேற்றும் ''வளையாபதி''

## 'குமணவில்' வந்த பொருள்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு அண்மையில் வந்து சேர்ந்த''குமண'' என்ற கப்பலில் எடுத்து வரப்பட்ட மேலும் சில பொருள்களின் விபரம் வருமாறு.

985 மெற்றிக் தொன் அரிசி 1050 மெற்றிக்தொன் சீனி, 50 மெற்றிக்தொன் மைசூர்ப் பருப்பு. 5 மெற்றிக்தொன் பட்டாணிப் பருப்பு 25 மெற்றிக்தொன் உழுந்து, 10 மெற்றிக்தொன் தேயிலை, 5 மெற்றிக் தொன் தீப்பெட்டி, 10 மெற்றிக்தொன் மல்லி ஆகியனவும் 42 மெற்றிக்தென் மண்ணெண்ணெய், 20 மெற்றிக்தொன் டீசல் ஆகியவையும் எடுத்து வரப்பட்டதாக தெரியவருகிறது.

அரசியற்

டம் சகல பிரச்சினைகளையும் பிரதிபலிக்கும் தரமான உண்மைகளை வழங்குகிறது. மக்கள் தொகை சாதி அல்லது மதம் என்ற அடிப்படையில் இது எப்பொழுதும் மாறுபடப் பேசவதில்லை. அற்பமான அரசியல் லாபங்களை அடைவதற்காக சில சக்திகள் இந்த அடிப்படை உண்மைகளுக்குப் பல்வேறு விளக்கங்களைக் கொடுக்கின்றன. இதன் காரணமாகத் ...

கொழும்பில் தமிழ்

இளைஞர்களில் இருபது பேர் அதி தீவிரவாதிகள் எனவும், இவர்களில் இருவர் பெண்கள் ...

## கடமையை ஏற்பதை தடுக்க வேண்டாம்

அண்மைய இராணுவ நடவடிக்கை காரணமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் கற்பித்து வடக்குக் கிழக்கு மாகாணங்களை விட்டு வெளியேறி

ஏ சி. மொகைதீன்

வேறு மாகாணப் பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்கள் மீளவும் தனது பழைய பாடசாலைகளுக்கு வரும்போது அவர்களைக் கடமையேற்க அனுமதிக்குமாறும் இவர்களை எக்காரணம் கொண்டும் கடமையேற்பதை தடை செய்ய வேண்டாம் எனவும் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம் ஏ. சி. மொகைதீன் சகல பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் கோரியுள்ளார்.

மேலும் இவர்கள் கடமையேற்ற தினம் தொடக்கம் இவர்களுக்கு சம்பளத்தை வழங்குமாறும். முன்னர் இடம் பெயர்ந்து பணியாற்றிய மாகாண கோட்டக் கல்விப் பணிப்பாளரிடம் இருந்து இவர்கள் பெற்றசம்பளவிபரத்தைப் பெற்று இவர்களது பாக்கிச் சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் மேலும்அவர் பணித்துள்ளார்

முஸ்லிம்

தெரிவித்துள்ளனர்.

மேலும் தாம் மீண்டும் மன்னாருக்குச் செல்வதானால் குடும்பத்திற்கு ஒரு துப்பாக்கி வழங்கவேண்டும் எனவும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊர்காவற்படை

இவர்கள் மாத்தறைப் பகுதியில் துப்பாக்கியுடன் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து 303 ரகரைபிள் ஒன்றும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளும் மாத்தறைப் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது

# O/L

சனி, ஞாயிறு வகுப்புக்கள்
(8.00 - 3.00)

## ஆண்டு 10, 9, 8, 7, 6

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | - | திரு J R. சூரி |
| கணிதம் | - | திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | - | திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி | - | திரு கோபி |
| தமிழ் | - | திரு. சிவா |
| வர்த்தகம் | - | திரு. கருணாகரன் |
| சமயம் | - | திரு கொங்கா |

## ஆரம்பம்:
## 05.12.92(சனி) மாலை 3மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும் ★

(சி-5440)


## மரண அறிவித்தல்

சட்டத்தரணி

### R. R. தர்மரத்தினம் (J.P.U.M.)

சட்டத்தரணி R. R. தர்மரத்தினம் (J.P.U.M) காலமானார் அன்னார் காலஞ்சென்ற திரு, திருமதி V. R. இரத்தினம் அவர்களின் அன்புப் புதல்வரும் R. சிங்கரத்தினம், R. கோபாலரத்தினம், காலஞ்சென்ற R. விஜயரத்தினம், R. அழகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29 - 11 - 92 (இன்று) மாலை 3-00மணிக்கு அவரது இல்லத்தில் (உடுப்பிட்டியில்) நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபைச் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
(3725) R. கோபாலரத்தினம்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


நது யாழ் - திருமறைக் கலாமன்றம் தயாரித்து மேடையேற்றும் ''வளையாபதி'' இசை நாடகம் இன்று மாலை 6.45 மணிக்கு மேடையேறுகிறது.

யாழ்-பிரதான வீதி மன்ற வெளியரங்கில் மேடையேறும் ''வளையாபதி'' நாடகத்தில் பழைய-புதிய தலைமுறைக் கலைஞர்கள் பங்கொடுத்துள்ளனர். (21)

## இலக்கிய உரை

(குருநகர்)

யாழ்-திருமறைக் கலாமன்ற இலக்கிய அவை நாளை மாலை 4-30 மணிக்குபிரதான வீதி மன்றக் கேட்போர் கூட்டத்தில் கூடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

செல்வி ந. விமலாம்பிகை 'ஈழத்தில் எழுந்த தமிழ்இலக்கியங்கள்'' என்னும் தலைப்பில் இலக்கிய உரை நிகழ்த்தவுள்ளார். (21)

## போசாக்கு கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையம் இன்றுபெண்களும்போசாக்கும் தொடர்பான ஓர் கருத்தரங்கினை மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளது. காலை, 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இக் கருத்தரங்கில் செஞ்சிலுவைச்சங்க சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சிபெறும் 120 இளம் பெண்கள் பங்குபற்றவுள்ளனர் பெண்களுக்குப் போசாக்கு சம்பந்தமான அறிவை வளர்ப்பது இன்றைய சூழலில் போசாக்கான உணவு வகைகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளுதல் என்பதை அறிய உதரவும் போசாக்கு குறைவின் பாதிப்பினை விளக்குவதும் இக் கருத்தரங்கின் நோக்கமாகும் இக் கருத்தரங்கில் டாக்டர் எஸ். நச்சினார்கினியன். டாக்டர் வி.சிறிகாந்தா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளனர்.

ருக்குப் பல்வேறு விளக்கங்களைக் கொடுக்கின்றன. இதன் காரணமாகச் சில பிரிவினருக்கு அநீதிகள் இழைக்கப்பட்டன. இவற்றை ஒழித்துக் கட்டுவதுதான் அரசின் குறிக்கோள்.

ஜனநாயகப் பாதையைப் பின்பற்றும் இன்றைய அரசு ஜனநாயக அமைப்பில் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைத்து வருகின்றது- இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

யுத்தத்தால் சீரழிந்த பகுதிகளைச் சீரமைப்பதற்குப் போதிய பணம் அரசிடம் உண்டு. வவுனியாவின் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் பிரேமதாசா தெரிவித்தார்.

இராணுவத்

தொடங்கியுள்ளன

இந்நிலையில்தான் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்து அரசாங்கம் சிந்திக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டது.

தேர்தற்கால

கொழும்பு வரை வந்து விட்டது கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக போர் நடத்தப்படும் போதிலும் உயிர் மற்றும் உடைமை இழப்புக்கள் தொடர்கின்றனவேயன்றி தீர்வு எதுவும் வருவதாய்க் காணவில்லை என்றும் குறிப்பிட்டார்.

தமது ஆட்சிக் காலத்தில் செல்வநாயகம், திருச்செல்வம் போன்ற தலைவர்களுடன் இனப் பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும், செல்வநாயகம் சுகவீனமுற்றமையால் அப்பேச்சுக்கள் தொடர முடியாமற் போனது துரதிர்ஷ்டமானது என்றும்அவர் ஞாபகப்படுத்தினார்.

அது தவிரவாதிகள் எனவும், இவர்களில் இருவர் பெண்கள் எனவும் இவர்களிடமிருந்து ஐந்து தமிழ் அரசியல்வாதிகளின் பெயர்கள் கொண்ட பட்டியல் கைப்பற்றப்பட்டதாகவும் கொழும்புப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சுருக்கெழுத்தாளர்

மதிக்கப் பட்டிருந்தனர்.

இதனால் அனுமதி அட்டை இல்லாத சுமார் எண்பதுக்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள் இதேவேளை இப் பரீட்சார்த்திகளுக்கு தட்டெழுத்துப் பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதி அட்டைகள் வேறு பரீட்சை மண்டபத்தில் கிடைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுருக்கெழுத்தாளர்களுக்கான பரீட்சையை மீண்டும் நடாத்துமாறு பரீட்சைத்திணைக்களத்தை கேட்க விருப்பதாக யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்திரலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பில்

பிரிவினைக்கே இட்டுச் செல்லும்.

அத்துடன் இப் பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் நாம் கொழும்பில் வாழ முடியாத நிலைதான் ஏற்படும். நாநூறுக்கும் மேற்பட்ட படையினரை தனது சொந்தப் பாதுகாப்பிற்காக ஜனாதிபதி ஈடுபடுத்துகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குண்டு

ஆடுகின்றது. என மேலும் தெரிவித்தார்.

நவசமசமாஜ கட்சிதலைவர் வாசுதேவ நாணயக்காரா மேலும் தெரிவித்ததாவது வரவு செலவு திட்டத்தில் பாரிய நிதியை ஒதுக்குவதன் மூலம் பிரச்சினையை தீர்க்க முடியாது என்றும் உறுதியான ஒரு அரசியல் தீர்வே முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார்.


# கலை, வர்த்தகக் கல்லூரி
# C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகாமை

## A/L 94 புதிய பிரிவு
## சனி, ஞாயிறு வகுப்புக்கள்

| | | | |
|---|---|---|---|
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ | 8—9 |
| பொருளியல் | — | திரு. உதயன் | 9—10 |
| வர்த்தகம் | — | திரு. இரட்ணம் | 10—11 |
| இந்து நாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் | 11—12 |
| அளவையியல் | — | திரு. சயந்தன் | 1—2 |
| தமிழ் | — | திரு. தங்கராசா | 8—9 |
| புவியியல் | — | திரு. வேலாயுதபிள்ளை | 12—1 |
| அரசியல் | — | திரு. பஞ்சு | 7—8 |
| கிறிஸ்தவ நாகரிகம் | — | செல்வி சாந்தி | 11—12 |

ஆரம்பம்: 29 - 11 - 1992

குறிப்பு:
1. அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்
2. பிரிவு I க்குரிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
3. பிரிவு II புதிய அலகில் இருந்து ஆரம்பமாகும்.

★ விபரங்களுக்கு நேரில்

(சி'5412) -நிர்வாகி


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 25.11.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- —
வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்:- —
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;-
26-7068, 24-853, 26-8223, 24-5676, 27-1375, 28-1706, 24-5041, 42-970, 24-6431, 41-8626, 41-1092, 22- 355, 25-1334.

### 26.11.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- —
வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்:- —
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-
42-9326, 41-9663, 25-4164, 26-2414, 26-7187, 28-4525